# நிலாவின் நூலகம் - 8

- ***திருகோணமலை எங்கள் கோட்டை. இதனை கூறுபோட்டு விற்றவர்களை மறப்போமா???***

**மீள்பதிவு.**

அனைவருக்கும் பணிவான வணக்கம்.

(குறித்த பதிவானது நான்கு வருடங்களுக்கு முன்பு என்னால் எழுதப்பட்டது)

தமிழ்த் தேசியத்தை உளமார நேசிக்கும் உள்ளங்களின் மேலான சிந்தனைக்கு...!!!

திருகோணமலையில் நாம் இழந்தவை என்னவென்று கேளுங்கள்:

அமரிவயல் என்ற ஊர் கேள்விபட்டீர்களோ??

கல்லோயா எப்போது விவசாய நீர்ப்பாசன திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போதே கந்தளாய், அல்லை குடியேற்ற திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த விடயத்தை எவ்வாறு கண்டு பிடிப்பது?

இதனை அப்போதும் இப்போதும் உள்ள திருகோணமலை சிங்கள மக்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் நாம் கவனத்தில் கொள்ள முடியும்

கந்தளாய் திட்டத்திற்கு மாத்தளை குருநாகல, அம்பாந்தோட்ட, ஆகிய இடங்களில் இருந்து சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டார்கள்.

திருகோணமலை மாவட்ட சிங்கள குடியேற்றங்கள்

அனுராதபுரம், வவுனியா நோக்கி போகும் பாதையில் உள்ள

1) கொரக்கப்பொத்தான் 24km முதலிக்குள குடியேற்றம். (மொறவா )

அவ்விடத்திலிருந்து 8 km பெரியவிளாங்குளம் குடியேற்றம் (மஹாதிவுல்வெ)

1880 ஆண்டில் நடைமுறை திருகோணமலை மாவட்டத்தில் இருந்த நிர்வாக அலகு

1) கட்டுக்குள பற்று (வடக்கு
2) தம்பலகாமம் பற்று (கிண்ணியா கந்தளாய் ) மேற்கு
3) கொட்டியாபுரப் பற்று (தெற்கு )
4) திருகோணமலை நகரம் மையம்

ஈழத்தில் உள்ள தமிழ்மக்கள் வாழும் பிரதேசமான வடக்கு கிழக்கின் மையப்படுத்தியே திருகோணமலை இதனாலேயும் திருகோணமலை துறைமுகத்தில் இருந்து இந்து சமுத்திரத்தின் நடமாட்டத்தை முழுமையாக கண்காணிக்க முடியும் என்பதாலும் திருகோணமலை துறைமுகத்தில் உள்ள கப்பல்களை வெளிப்புறத்தில் இருந்து காண முடியாது என்பதுடன் வங்கதேச அலைகள், கடற்கோள் மாற்றங்கள் எதுவும் திருக்கோணமலை துறைமுகத்தை தாக்காது என்பதாலுமே இந்திய, அமெரிக்க , சீன வல்லாதிக்க நாடுகளுக்கு இலங்கை மீது தீராத காதலுண்டு ..இந்த காதலி ஈழத்தமிழரின் கையில் இருப்பதால் நம் எமக்கான வெற்றியை இலகுவில் எட்டிப்பறித்திட முடியும். .ஆனால் காலம் காலமாக எம் கேடுகெட்ட இனத்தின் தலைமைத்துவ போட்டியும், சுயநலமும்,ஆசையும் இன்று எம்மை கையேந்தும் நபர்களாக மாற்றி இருப்பதுடன் தமிழ்நாட்டில் இருந்து உணர்ச்சி பேச்சு பேசும் சீமான் எம்மை வழிநடத்தும் கீழ்த்தரமான நிலையில் நாம் இன்று உள்ளோம் ..அறிவியல் தேடலற்ற மந்தைகளாக ஈழத்தமிழினம் மாறியதாக சீமானை வால்பிடித்து திரியும் நபர்கள் எண்ணிட வேண்டாம்

வடக்கு கிழக்கின் மையம் தான் திருகோணமலை நகரம்

1) தென்னவன் மரபுஅடி
2) தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவு

இந்த இடங்களை சிங்கள பிரதேசமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இந்த இடங்களை மையப்படுத்தி பல்வேறு செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டு உள்ளன.

திருகோணமலை மாவட்டத்தை அரை வட்டமாக நோக்கினால்; தென்னவன் மரபுஅடியில் இருந்து 45 பாகையில் நோக்கினால் கன்னியா, முதலிக்குளம், பெரியாவிளாங்குளம் சிங்கள ஆக்கிரமிப்பு

அடுத்து 45 பாகையில் உள்ள தம்பலகமம் , கந்தளாய் ஆகிய பகுதிகள் சிங்கள ஆக்கிரமிப்பு.

அடுத்து 45 பாகையில் உள்ள அல்லையை ஊடறுத்து செல்லும் உள்ள திருமங்கலாய்.

இது மிகவும் முக்கியமான இடம்.

இதற்கு அருகிலே அகஸ்த்திய நிறுவகம் உண்டு.

அடுத்து வெருகலை மையப்படுத்திய திட்டமிட்ட சிங்கள ஆக்கிரமிப்பு திட்டங்கள்.

திருநீலி அம்மன் ஆலயம் உள்ள இடம்.

இந்த ஐந்து ஐந்து இடங்களையும் மையப்படுத்தி 2008 ஆம் ஆண்டின் பின்னர் சிங்கள நபர்கள் செய்த வேலை என்ன என்பதை அறியுங்கள்.

ஆகவே திருக்கோணமலை எங்கள் கோட்டை என்று கூறும் அனைவரும் எதனால் திருக்கோணமலை எங்கள் கோட்டை என்று எதனால் கூறப்படுகின்றது என்பதையும் அறியுங்கள் ..

**காவியா**
**20/06/2020**
**08:28**
**லண்டன்**

................................................................................